# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் நைஜீரியாவில் 02.05.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

*தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

இன்று அல்லாஹ்வின் அருளால் நைஜீரியாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 58 வது ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. உலகிலுள்ள பெரும்பாலானவர்கள் இறைவனை மறந்து விட்ட இந்த காலத்தில் அஹ்மதிகள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு நாட்டிலும் மாநாடுகளை நடத்துவது அல்லாஹ் நம்மீது செய்துள்ள மாபெரும் அருளாகும். தங்களிடம் ஒரு ஆன்மீக மாற்றத்தை உருவாக்குவதற்காகவே வருடத்தில் ஒரு முறை அவர்கள் ஒன்று கூடுகின்றார்கள். அதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்பவர்களாக ஆகி விடுகின்றார்கள். இந்தப் புரட்சியை ஏற்படுத்துவதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை உலகிற்கு அனுப்பியுள்ளான். நாம் நம்மிடத்தில் இந்த புரட்சியை ஏற்படுத்தவில்லையென்றால், மேலும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இன்று நாம் இங்கு ஒன்றுகூடவில்லையென்றால் பிறகு இந்த மாநாட்டில் எந்தப் பயனும் ஏற்படாது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சொற்களிலிருந்து நமக்குத் தெரிய வருகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவான சொற்களில் ஒரு திருவிழா போன்ற சூழலை ஏற்படுத்துவதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை; மக்களை ஒன்றுகூட்டி உலகிற்கு நமது ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுவதிலும் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை என்று கூறியுள்ளார்கள்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் எப்படிப்பட்டதென்றால் அதன் மீது எனக்கு வெறுப்பு ஏற்படுகின்றது என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இங்கு மாநாட்டில் சொற்பொழிவுகள் நடைபெறும். பெரும் பெரும் பேச்சாளர்கள் பேசுவார்கள். அறிவுப்பூர்வமான பல விஷயங்களும் பேசப்படும். மக்களும் இந்த சொற்பொழிவுகளைக் கேட்டு விட்டு சொற்பொழிவு நிகழ்த்திய பேச்சாளர்களை பெரிதும் பாராட்டி புகழ்கின்றார்கள். இந்த சொற்பொழிவுகளாலும் பேச்சாளர்கள் எடுத்துக் கூறிய மிக உயர்ந்த அறிவுப் பூர்வமான விஷயங்களாலும் ஜமாஅத்திலுள்ள மக்களது உள்ளங்களில் எந்த தாக்கமும் ஏற்படவில்லை என்றால் அவற்றால் என்ன பலன்? என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கேட்டுள்ளார்கள்.

எனவே, எந்த விஷயத்தை நாம் கேட்கின்றோமோ அவற்றை நாம் வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

நமது வாழ்க்கையை எந்த உயர்வான தரத்தில் கொண்டு வர வேண்டும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்களோ அந்த உயர்வான தரத்தில் நமது வாழ்க்கை அமைய அல்லாஹ் தவ்ஃபீக் வழங்குவானாக! நம்மீது அல்லாஹ்வின் சிறப்பான அருள் இல்லாமல் அந்த உயர்வான தகுதியை நாம் பெற முடியாது. அல்லாஹ்வின் அருளை பெறுவதற்கும் ஒரு சிறப்பான முயற்சி தேவைப்படுகிறது. அப்போதுதான் அல்லாஹ் தனது சிறப்பான அருளை வழங்கியவாறு தனது அடியானின் பக்கம் ஓடி வருவான். தனது அடியானின் முயற்சியை அவன் ஏற்றுக் கொள்வான். அந்த அடியானுக்கு தனது அருளை வழங்குவான். மேலும் அவனது திருப்தியைப் பெறும் அளவிலுள்ள பணிகளை அந்த அடியானைச் செய்ய வைக்கின்றான்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا - அதாவது எவர் நம்மை சந்திப்பதற்கு முயற்சி செய்வாரோ நாம் நிச்சயமாக அவர்கள் நமது வழிகளின் பக்கம் வருவதற்கான நற்பாக்கியத்தை அவர்களுக்கு வழங்குவோம். (29:70)

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

உங்களது நஃப்ஸில் மாற்றம் ஏற்பட முயற்சி செய்யுங்கள். தொழுகையில் துஆக்களைக் கேளுங்கள். ஸதக்கா, தான தருமங்கள், ஏனைய ஒவ்வொரு நற்செயல்கள் மூலமாகவும் وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا - நம்மை சந்திக்க விரும்புபவர்களுடன் நுழைந்து விடுங்கள். எவ்வாறு ஒரு நோயாளி மருத்துவரிடம் சென்று மருந்து சாப்பிட்டு, இரத்தத்தை பரிசோதனை செய்து அவர் குணமடைவதற்கான ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்துகின்றாரோ அவ்வாறே உங்களது ஆன்மீக நோய்களை விலக்குவதற்காக எல்லா விதமான முயற்சிகளையும் செய்யுங்கள். வெறும் நாவால் மட்டுமின்றி முயற்சிகள் செய்வதற்கு என்னென்ன வழிமுறைகளை இறைவன் கூறியுள்ளானோ அவை அனைத்தையும் நீங்கள் கடைபிடிக்க வேண்டும். அவற்றை செயல்படுத்த வேண்டும்.

எனவே, பைஅத் செய்த பிறகு இந்த பணியை ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமும் செய்து கொண்டேயிருக்க வேண்டியது அவசியமாகும். இறைவனது நெருக்கத்தை பெறுவதற்கான வழிமுறைகளில் ஓர் வழிமுறையாகவும், தூய மாற்றத்தை நம்மிடம் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளில் ஓர் வழிமுறையாகவும் இந்த மாநாடு இருக்கின்றது. நிச்சயமாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு பெரும் முயற்சிகளை செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்புகின்றோம் என்பதற்கு நாம் பெரும் எண்ணிக்கையில் இந்த மாநாட்டில் ஒன்றுகூடியிருப்பது ஓர் உறுதியான ஆதாரமாக இருக்கின்றது.

எனவே, இந்த மூன்று நாட்களிலும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நீங்கள் இங்கு ஒன்று கூடியிருப்பதன் நோக்கத்தையும் உங்களால் நிறைவேற்ற முடியும்.

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான மிக முக்கியமான வழி தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவதாகும்.

உங்களது நஃப்ஸில் மாற்றங்களை ஏற்படுத்த நீங்கள் முயற்சி செய்யுங்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பதுடன் அதற்காக எல்லாவற்றையும் விட முதலாவதாக தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்தும் படியே அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அதற்காக தொழுகைகளில் துஆ செய்யும்படி அவர்கள் கூறியுள்ளார்கள்.

மனிதன் தூய்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் முன்பாக குனியும் போது அல்லாஹ் அருள் செய்தவாறு அவனது நல்ல எண்ணங்களை ஏற்றுக் கொண்டவாறு அவனிடம் தூய மாற்றங்களை ஏற்படுத்துகின்றான். அதன் மூலம் வீணான, தவறான பணிகளிலிருந்து மனிதன் தப்பித்துக் கொள்கின்றான். அவனுக்கு நன்மைகளின் பக்கம் கவனம் ஏற்படுகிறது.

**இதைப் பற்றி அல்லாஹ்வே திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:**

اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ - அதாவது தொழுகை எல்லா விதமான தீய வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்தும் ஒருவரை தடுக்கின்றது. (29:46)

இது அல்லாஹ்வின் அறிவிப்பாகும். தொழுகை தீமையான வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்தும் ஒருவரை தடுக்கின்றது. ஆனால், நாம் நமது சுற்றுச் சூழலை பார்க்கும் போது வெளிப்படையாக நமது பார்வையில் அதிகமாக தொழக்கூடிய மக்களின், ஹஜ் செய்கின்றவர்களாக இருக்கக் கூடிய மக்களின் மற்ற செயல்களையும் மற்ற ஒழுக்கங்களையும் நாம் பார்க்கும் போது சில நேரங்களில் மார்க்கமே இல்லை என்ற கொள்கையை உடையவர்கள் கூட இவர்களை விட உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களாக இருப்பது தெரிய வருகின்றது. அப்போது தொழுகை இவர்களிடம் எந்த நன்மையையும் ஏற்படுத்தவில்லை என்பதே வெளிப்படையாக பார்க்கும் போது உங்களுக்கு தெரிய வருகின்றது. பிறகு தொழுவதால் என்ன பயன்? இங்கு தொழுகையில் எந்த குற்றமும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, தொழுகையை அதன் நிபந்தனைகளுடன் நிறைவேற்றாமல் இருக்கின்ற தொழுகையாளிகளின் குற்றம்தான் இதில் இருக்கின்றது. அதனால்தான் தொழுகை தீமைகளிலிருந்து ஒருவரை தடுக்கின்றது என்று அல்லாஹ் கூறியிருக்கும் இடத்திற்கு அதற்கு முன்பாக *அகிமிஸ்ஸலாத்த* - அதாவது தொழுகையை அதன் எல்லா நிபந்தனைகளுடனும் நிறைவேற்றுங்கள் என்றும் கூறியுள்ளான். தொழுகைகள் அதற்குரிய நிபந்தனைகளுடன் நிறைவேற்றப்படும்போது பிறகு அந்த தொழுகை ஒருவரை வெட்கக் கேடான செயல்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் தடுக்கும். தொழுகைக்கு பல நிபந்தனைகள் உள்ளன. உளூ செய்வது, தூய்மையாக இருப்பது, ஆண்கள் பள்ளிவாசல்களுக்கு வந்து தொழுவது, முழுமையான மனத்தூய்மையுடன் அல்லாஹ்வின் முன்பு நிற்பது போன்ற நிபந்தனைகளை பேண வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அது என்னவென்றால், நீங்கள் தொழுகைக்காக நிற்கும்போது நீங்கள் இறைவனை காண்கின்றீர்கள் என்ற எண்ணத்தில் நிற்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் அல்லாஹ் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற எண்ணத்திலாவது தொழுகைக்காக நிற்க வேண்டும். என்னை பார்க்கின்ற அந்த இறைவன் எனது மூளை, உள்ளம் ஆகியவற்றின் ஆழம் வரை அறிந்தவனாக இருக்கின்றான். எனது உள்ளத்தில் எந்த ஒரு எண்ணம் வந்தாலும் அந்த எண்ணம் வருவதற்கு முன்பே எனது இறைவன் அதைப் பற்றி அறிந்திருக்கின்றான். எனவே, நமது இறைவன் எப்படிப்பட்ட இறைவனாக இருக்கின்றான் என்றால், அவனை ஒருபோதும் ஏமாற்ற முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எந்த தொழுகை முழுக்க முழுக்க கலப்பற்ற மனத்தூய்மையுடன் இறைவனுக்காக நிறைவேற்றப்படுகின்றது என்பதையும் எந்த தொழுகை ஒருவர் தனது நஃப்ஸை தூய்மைப்படுத்துவதற்காக நிறைவேற்றப்படுகிறது என்பதையும் அந்த இறைவன் அறிந்தவனாக இருக்கின்றான். அவ்வாறே எந்த தொழுகை பிறருக்கு காட்டுவதற்கு மட்டும் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் அந்த இறைவன் அறிந்தவனாக இருக்கின்றான். எனவே, எந்த தொழுகை முழுக்க முழுக்க இறைவனுக்காக நிறைவேற்றப்படுகின்றதோ அந்த தொழுகைகள்தான் ஏற்றுக் கொள்ளப்படும். இப்படிப்பட்ட தொழுகைகள் தான் உள்ளங்களை தூய்மைப்படுத்தக் கூடியவையாக உள்ளன. இப்படிப்பட்ட தொழுகைகள்தான் வெட்கக்கேடான செயல்களிலிருந்து நம்மை தடுக்கின்றது. எனவே, அஹ்மதிகள் தொழும்போது இப்படிப்பட்ட தொழுகையைத் தேட வேண்டும். அவ்வாறில்லையென்றால், வெளிப்படையாக பார்க்கும் போது ஒருவர் எவ்வளவு பெரிய நல்ல மனிதராக இருந்தாலும் அவரது ஒவ்வொரு செயலும் இறையச்சத்தை தன்னகத்தே கொண்டிருப்பதாக அமைய வில்லையென்றால் அவரது தொழுகைகளையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். மாறாக, அவரது வெளிப்படையான செயல்கள், வெளிப்படையாக அவர் பேசும் பேச்சுக்கள் அவரது உள்ளத்தின் ஆழத்திலுள்ள விஷயங்களுக்கு மாற்றமாக இருப்பதால் அப்படிப்பட்ட தொழுகையாளிகளின் தொழுகைகள் அவரிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்குப் பகரமாக அவரது அந்த தொழுகையை அல்லாஹ் அவரது அழிவிற்கு காரணமாக ஆக்கி விடுவான். அதைப் பற்றியே அல்லாஹ் فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ۝ - அந்த தொழுகையாளிகளுக்கு அழிவு தான் என்று கூறியுள்ளான். எந்த தொழுகையாளிகளுக்கு அழிவு ஏற்படும்? الَّذِيْنَ هُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنَ ۝

- அவர்கள் தொழுகைகளில் கவனமற்றவர்களாக இருப்பார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் தொழக் கூடியவர்களாக இருந்தாலும் அவர்களது உள்ளம் உலக விஷயங்களில் மூழ்கியிருக்கின்றது. வெளிப்படையாகப் பார்க்கும் போது இப்படிப்பட்டவர்கள் ஹஜ்ஜையும் நிறைவேற்றியிருப்பார்கள். ஆனால், இந்த தொழுகைகளும் ஹஜ்ஜும் அவர்களிடம் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்காது. அவர்களை அல்லாஹ் தொழுகையில் மட்டும் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்களது பொது வாழ்க்கையில் அவர்கள் பேசுகின்ற ஒவ்வொரு பேச்சையும், அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் இறைவன் அறிந்தவனாக இருக்கின்றான் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றார்கள்.

எனவே தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நமது ஒவ்வொரு செயலையும் சரியாக வைப்பது அவசியமானதாகும். உங்களது உள்ளத்தின் அந்தரங்க நிலைமையும் உங்களது செயலும் ஒன்றுபோல் இல்லை என்றால் நீங்கள் الَّذِينَ هُمْ يُرَاءُونَ - அவர்கள் பிறருக்கு காட்டுவதற்காகவே இதனை செய்கின்றார்கள் என அல்லாஹ் குறிப்பிட்டுள்ள மக்களை சேர்ந்தவர்களாக ஆகி விடுவீர்கள். அவர்களது உள்ளங்கள் தொழுகையின் உண்மை நிலையிலிருந்தும் கவனமற்றதாகவும் அவர்கள் பிறருக்கு காட்டுவதற்காகவே தொழுகையை நிறைவேற்றுபவர்களாகவும் இருந்தால் அப்படிப்பட்டவர்களது தொழுகைகள் அவர்களது தீமைகளிலிருந்து அவர்களை தடுப்பதற்குப் பகரமாக அவரது அழிவிற்குரிய பொருளாக ஆகி விடும்.

நாம் எந்த காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு நாங்கள் மற்றவர்களை விட சிறந்தவர்களாக இருக்கின்றோம் என்று வாதம் செய்கின்றோமோ அந்த வாதம் மட்டும் போதுமானதல்ல. மாறாக, நாம் நம்மிடத்தில் ஒரு ஆன்மீகப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்பதை எப்போதும் உங்கள் நினைவில் வைக்க வேண்டும். எல்லா விதமான தீமைகளிலிருந்தும் தடுக்கின்ற அந்த தொழுகைகளை நாம் தொழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நன்மையான செயல்களை செய்வதன் பக்கம் நம்மை முன்னோக்கி செல்ல வைக்கின்ற அந்த தொழுகைகளை நாம் தொழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நாம் தொழுகைகளை தொழுவது நமது வாழ்க்கையில் புரட்சியை கொண்டு வரவில்லை என்றால் நாம் மிகவும் கவலைப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே முஸ்லிமாகவும் மூஃமினாகவும் இருக்கின்ற ஒரு அஹ்மதிக்கு எல்லாவற்றையும் விட முதலாவதாக தமது தொழுகைகளை பாதுகாப்பது கடமையாக இருக்கின்றது. உங்களது தொழுகைகளை உங்களுக்குள் இருக்கின்ற மற்ற நல்லொழுக்கங்களுக்குரிய அளவுகோலாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லது உங்களது உயர்வான நல்லொழுக்கங்களை உங்களது தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அளவுகேலாக ஆக்கிக் கொள்ளுங்கள். நாம் உயர்வான நல்லொழுக்கங்களை வெளிப்படுத்தாமல் இருந்தால், இக்காலத்தின் குழப்பங்களிலிருந்து நாம் தப்புவதற்கு முயற்சி செய்யாமல் இருந்தால் பிறகு நாம் நமது தொழுகைகளை பாதுகாக்கவில்லை; முயற்சிகளைச் செய்யவில்லை என்றே அதற்குப் பொருள். தூய மாற்றத்தை நம்மிடத்தில் ஏற்படுத்த நாம் செய்யும் முயற்சிகளில் எல்லாவற்றையும் விட முதலாவதாக கலப்பற்ற முழுமையான மனத்தூய்மையுடன் இறைவனை வணங்குவதும் தொழுகைகளை நிறைவேற்றுவதும்தான் இருக்கின்றது என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். எப்போதும் துஆவின் பக்கமும் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பக்கமும் நமது கவனம் இருக்க வேண்டும். பிறகு உங்களது சக்திக்கேற்ப நீங்கள் சதகா கொடுக்க வேண்டும். சதகா கொடுப்பதும் துன்பங்களை அகற்றி விடும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இன்று இந்தக் காலத்தில் உலக விஷயங்களில் மூழ்கியிருப்பது, ஒழுக்க சீர்குலைவு, ஒருவர் மற்றவரது உரிமைகளை கவனத்தில் கொள்ளாமல் இருப்பது, அல்லாஹ்வை உண்மையாகவே வணங்குவதிலிருந்தும் கவனமற்ற நிலையில் இருப்பது ஆகிய இவற்றை விட நமது வாழ்க்கையை அழிக்கின்ற வேறு என்ன துன்பம் இருக்க முடியும்?

எனவே, யாருக்கெல்லாம் எந்த அளவு சக்தி இருக்கின்றதோ அதற்கேற்ப அவர் சதகா கொடுக்க வேண்டும். பிறருக்கு காட்டுவதற்காக அதை கொடுக்காமல் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதை கொடுக்க வேண்டும். இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக எந்தப் பணி செய்யப்படுகிறதோ அது நிச்சயமாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தகுதியை பெற்று விடும். ஏனென்றால், அல்லாஹ் மனிதனின் எண்ணத்திற்கேற்ப மனிதனிடம் பரிமாறுகின்றான். எந்த செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்படுமோ அது தூய மாற்றங்களில் ஒருவரை கொண்டு செல்லும். அதில் அவரை முன்னேறும்படி செய்யும். பிறகு நஃப்ஸில் மாற்றங்களை ஏற்படுத்த எல்லாவிதமான திட்டங்களும், முயற்சிகளும் அவசியமானதாகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இறைவன் கூறியுள்ள எல்லா நல்லொழுக்கங்களையும் பேணி நடப்பது அவசியமானதாகும். உதாரணமாக அல்லாஹ் உங்களில் ஒருவர் மற்றவரிடம் மென்மையாக பேச வேண்டும். மென்மையுடன் பரிமாற வேண்டும் என்று கூறியுள்ளான். அவ்வாறே உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை பாதுகாக்க வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் எந்த ஒரு ஜமாஅத்தின் பணி ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் அது ஒரு *அமானத்* (அவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டது) ஆகும். அந்தப் பொறுப்பை நேர்மையுடன் அவர் நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் நம்பிக்கை துரோகம் செய்பவரை விரும்புவதில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். எவர் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு வெளியே சென்று விடுவாரோ அவருக்கு மார்க்கமும் இருக்காது. உலகமும் இருக்காது. சில நேரங்களில் மனிதன் தற்காலிக மன இச்சைகளை நிறைவேற்றுவதற்காக அமானத்திற்குரிய உரிமையை நிறைவேற்றாமல் அதன் காரணமாக அல்லாஹ்வின் பிடியின்கீழ் வந்து விடலாம். நான் இதற்கு முன்னரும் கூறியது போல் அல்லாஹ் நமது ஒவ்வொரு செயலையும் பார்க்கின்றான். மனிதர்களை ஏமாற்றி விடலாம். ஆனால் இறைவனை ஏமாற்ற முடியாது.

எனவே, தன்னிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவைக்குரிய உரிமைகளை செலுத்துவதிலும் உயர்வான தரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதை எப்போதும் ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். பிறகு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் ஒரு வாக்குறுதியைக் கொடுத்துள்ளார். அதாவது அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்த பிறகு அவர் தனது இறைவணக்கங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதாகவும் இறைவன் கூறியுள்ள மற்ற எல்லா கட்டளைகளையும் செயல்படுத்துவதாகவும் அவர் உடன்படிக்கை செய்துள்ளார். இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக எந்த செயலை நாம் செய்தாலும் அதுவும் இபாதத் (அதாவது இறைவணக்கம்) ஆகி விடும் என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். எனவே, எந்த கட்டளையையும் சிறிதாக கருதக் கூடாது. பிறகு அல்லாஹ் நாம் நிலைநாட்ட வேண்டிய உயர்வான நல்லொழுக்கமாக கூறியிருப்பது நீங்கள் உண்மையில் நிலைத்திருங்கள் என்பதாகும். நீங்கள் நேரான பேச்சை பேசுங்கள் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். அந்த பேச்சில் எவ்வித கோணலும் இருக்கக் கூடாது. தெளிவாக இல்லாத விஷயத்தைப் பேச வேண்டாம் என்றும் அவன் கட்டளை யிட்டுள்ளான். சரியான நேரான பேச்சை பேசுங்கள். அதற்கு விளக்கம் கூற வேண்டிய நிலை இருக்கக் கூடாது. பிறகு பொறாமையிலிருந்து தப்பித்துக் கொள்ளங்கள் என்றும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். ஏனென்றால், பொறாமையும் மனிதனை அவனுக்குள்ளேயே அவனை எரித்து விடுகின்றது. பிறகு பொறாமையின் காரணமாக அவர் மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றார். பொறாமை கொள்வது ஒரு நம்பிக்கையாளருக்கு உகந்த செயலல்ல. நீங்களும் பொறாமையிலிருந்து தப்பித்துக் கொள்வதுடன் அதற்காக துஆவும் செய்யுங்கள். இந்தக் காலத்தில் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை பார்க்கவே முடியாத அளவுக்கு பொறாமை கொண்டுள்ள பொறாமைக்காரார்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் இனிமையானவர்களாக தெரிவார்கள். ஆனால் உள்ளத்தால் அவர்கள் நமக்கு இழப்பை ஏற்படுத்தவே முயற்சி செய்கின்றார்கள். நாம் நமக்குள்

ஒற்றுமையாக இல்லையென்றால், மேலும் சில விஷயங்களில் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்பவர்களாக இருந்தால், பிறகு பொறாமை கொள்பவர்களின் தீங்கிலிருந்து நாம் எப்படி தப்ப முடியும்? எனவே நீங்கள் உங்களுக்கிடையில் அன்பு நேசம் ஆகியவற்றின் அழகான முன்மாதிரியை காட்டுங்கள். பிறகு வீணானவற்றிலிருந்து விலகியிருக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். ஏனென்றால், இக்காலத்திலுள்ள பல வீணான விஷயங்கள் நம்மை ஷய்த்தானின் மடியில் அமர வைக்கின்றது. அல்லாஹ் கூறியுள்ள இந்த கட்டளைகளின் பட்டியல் மிக நீண்டதாகும். ஜமாஅத்தின் அமைப்பிடமும் அன்ஸாருல்லாஹ், குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளிடம் கூறிக் கொள்வது என்னவென்றால் உங்களது ஜமாஅத்திலும் உங்களது அமைப்புகளிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரிடமும் உயர்வான நல்லொழுக்கத்தை உருவாக்க முயற்சி செய்யும் அளவிலுள்ள நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். பழைய அஹ்மதிகளின் ஒழுக்கத்தின் தரத்தையும் உயர்த்துங்கள். புதிதாக பைஅத் செய்பவர்களிடமும் உயர்வான நல்லொழுக்கத்தை உருவாக்குங்கள். புதிதாக பைஅத் செய்தவர்களை பாதுகாப்பதற்காக கிளை அமைப்புகள் உடனுக்குடன் அவர்களை தங்களது அமைப்புகளில் இணையும்படி செய்ய வேண்டும். அவர்களையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் நிகழ்த்த இருக்கின்ற இரண்டு சொற்பொழிவுகளிலும் அடிப்படையான நல்லொழுக்கங்கள் தொடர்பாக மேலும் விரிவாக கூற இருக்கின்றேன். ஏனென்றால் இப்போது நேரம் அதிகமாகி விட்டது. நீங்கள் மாநாட்டில் கலந்து கொண்டு இவ்விஷயங்களையெல்லாம் கவனத்துடன் கேட்டு புரிந்து அதன்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். நீங்கள் கொண்டாடுகின்ற இந்த கிலாஃபத் ஜுபிளி தொடர்பாக நான் கூறுவது என்னவென்றால் எவர்களுக்கு தங்களது நம்பிக்கையில் வலுவாக இருந்து நற்செயல்களை செய்வார்களோ அவர்களிடமே இந்த கிலாஃபத் என்ற அருட்கொடை தொடர்பாக அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். நாம் நமது இறைவணக்கங்களின் உயர்வான தரத்தை நிலைநாட்டி நமது தொழுகைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். நற்செயல்களை செய்வதுடன் இறைவனை வணங்குபவர்களாக இருப்பவர்களுடன் மட்டுமே அல்லாஹ் குறிப்பாக கிலாஃபத்தின் வாக்குறுதியை தொடர்புபடுத்திக் கூறியுள்ளான். எனவே மிகுந்த கவலையுடன் உங்களிடத்தில் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள். நைஜீரியா ஜமாஅத் கிலாஃபத்தின் அருள்களை நேரடியாகவே பெற்றுள்ளது. எனவே, நீங்கள் மிகவும் அதிகமாக இந்த அருட்கொடைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

எவர்கள் தங்களது பள்ளிவாசல்களோடு தனியாகப் பிரிந்து சென்றார்களோ அவர்களுக்கு எந்த அந்தஸ்தும் இன்று இல்லை என்பதை ஜமாஅத் நன்கறியும். ஆனால் எந்த மக்கள் கிலாஃபத்துடன் ஒன்றியிருந்து தங்களது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சி செய்தார்களோ அல்லாஹ் அவர்களுக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ளான். இன்று ஒவ்வொரு நகரத்திலும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் காட்சிகளை நீங்கள் கண்டுள்ளீர்கள். நீங்கள் ஆயிரக்கணக்கில் இன்று இங்கு கூறியிருப்பது கிலாஃபத்துடன் இணைந்திருப்பதில்தான் அருள்கள் இருக்கின்றன என்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

எப்போதும் உங்கள் பொறுப்புகளை புரிந்து செயல்படுங்கள். அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை உங்களுக்கு வழங்குவானாக. இந்த அருட்கொடையிலிருந்து நீங்கள் பலன் பெற்றுக் கொண்டே இருப்பீர்களாக.

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT NIGERIA**
**ON 02.05.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**